Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஐப்பசி 14 ஆம் நாள் ஜ. ஆகிர் பிறை 23 (30 10-64) வெள்ளிக்கிழமை இதழ் 261

மலிவு விற்பனை
நல்ல சந்தர்ப்பம்
புத்தம் புதிய டிசையின்:
★ பட்டு சேலைகள்
★ கோடம்பாக்கம் சேலைகள்
★ உறையூர் சேலைகள்
இன்னும் தெரிவு செய்ய
ஏராளமான தினுசுகள் உண்டு.
கணேசன் ஸ்ரோர்ஸ்
78, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7169

இலங்கை - இந்தியர் பிரச்னை

# சுமுகமான தீர்வு காணப்பட்டது

## 5,25,000 பேரை இந்தியாவும் 3,00,000 பேரை இலங்கையும் ஏற்றுக்கொள்ள முடிவு

### சரித்திரப்பிரசித்திபெற்ற தீர்வு என வர்ணிப்பு

புதுடில்லி, அக். 29

**சுமார் 25 வருடங்களாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நிலவிவந்த இலங்கை—இந்தியர் பிரச்னைக்கு சுமுகமான தீர்வு ஒன்று காணப்பட்டுள்ளது. இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும், இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியும் இன்று இதற்கான ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். முழுவிபரம் அடங்கிய அறிக்கை நாளை நண்பகல் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும்.**

உத்தியோகபூர்வமான செய்திகளிலிருந்து, இந்தியா 5,25,000 பேரையும் இலங்கை 3,00,000 பேரையும் ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளதாக நம்பப்படுகிறது. மிகுதி 1 1/2 லட்சம் பேரின் கதியை நிர்ணயிப்பதற்காக அடுத்த வருடம் முற்பகுதியில் இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள். இலங்கைப் பிரதமர் நாளை காலை இங்கிருந்து சென்னைக்கு சென்று அங்கிருந்து இலங்கை பயணமாவார்.

1939-ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் பிரதிநிதியாக அமரர் நேரு இலங்கை சென்றிருந்த சமயம் ஆரம்பமாகிய இப்பிரச்னைக்கு தீர்வு காண சென்ற சனிக்கிழமை தொடக்கம் இருநாட்டுப் பிரதமர்களும் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். நீண்ட காலப் பிரச்னையான இதற்கு ஒரு முடிவுகாண வேண்டுமென இருநாட்டுப் பிரதமர்களும் திடசங்கற்பம் பூண்டு பேச்சுவார்த்தை நடத்தினார்கள் எனலாம். இத

(6-ம் பக்கம் பார்க்க)

பிணையிலிருந்தபோது

## "எதிரிகள் சட்டவிரோதமாக இந்தியா போய் வந்தார்கள்"

### தலைமன்னார் கொலை வழக்கில் எதிரிகளுக்கு மீண்டும் ரிமாண்ட்

யாழ்ப்பாணம், வெள்ளி

தலைமன்னார் கொலைவழக்கில் தலா 1500 ரூபாய் பிணையில் சென்ற இருவர் சட்டவிரோதமாக இந்தியாவிற்கு சென்று மதுரையிலும் ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டு, பிணையில் விடுபட்டு மீண்டும் இலங்கைக்கு சட்ட விரோதமாக வந்து கைது செய்யப்பட்டதாக நேற்றுக்காலை வட பகுதி அசைஸ் கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது.

நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. சி. முன்னிலையில் தலைமன்னார் கொலைவழக்கில் எதிரிகளான மரியான் செபஸ்தியாம்பிள்ளை, மரியான் சந்தியாப்பிள்ளை ஆகிய இருவரும் ஆஜர் செய்யப்பட்ட போது முடிக்குரிய வழக்கறிஞர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

மன்னார் கோர்ட்டில் இவ்விரு எதிரிகளும், தலா 1500 ரூபாய் பிணையில் விடப்பட்டதாகவும், இருவரும் இந்தியாவிற்கு சென்று, அங்கும் ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டு, பிணையில் விடுபட்டு மீண்டும் இலங்கைக்கு சட்ட விரோதமாக வந்திருக்கிறார்கள் என முடிக்குரிய வழக்கறிஞர் தெரிவித்தார்.

நீதி: தற்பொழுது ரிமாண்டில் இருக்கிறார்களா?

(6-ம் பக்கம் பார்க்க)

## உத்தரவுபெருத வியாபாரியிடம் பத்துமூடை பர்மா அரிசி

### உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கச்சேரியைச் சேர்ந்த உணவுக்கட்டுப்பாட்டு மேற்பார்வை உத்தியோகத்தர்களைக்கொண்ட திடீர் பரிசோதனைக் குழு சென்ற வாரம் யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள இரண்டு கடைகளில் திடீர் பரிசோதனை நடத்தியதில் கூப்பனுக்குக் கொடுக்கப்படும் பர்மா அரிசி பத்து மூடைகள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. இதுபற்றி விசாரணை நடைபெற்று வருகிறது. இவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்தார்.

இக் கோஷ்டியினர் அரியாலையில் ஒரு கடைக்காரர் கால் ரூத்தல் புளியை 40 சதமாக விற்றதையும் பெரியகடையில் ஒரு கடைக்காரர் கால் ரூத்தல் புளியின் கட்டுப்பாட்டுவிலை பதின்மூன்றேகால் சதமாக இருக்கையில் 25 சதத்துக்கு விற்றதையும் கண்டுபிடித்தனர். மற்றொரு கடைக்காரர் 33 சதமாக விற்கவேண்டிய ஒரு ரூத்தல் பம்பாய் வெங்காயத்தை 40 சதமாக விற்றதையும் மற்றொரு வியாபாரி ஒரு ரூத்தல் சர்க்கரையின் விலை 55 சதமாக இருக்க அரை ரூத்தல் சர்க்கரையை 55 சதமாக விற்றதையும் கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## புதிய இந்திய ஸ்தானிகர்

கொழும்பு, வியாழன்

ஆந்திரப்பிரதேசம், ஒரிசா ராஜ்யம் ஆகியவற்றின் முன்னாள் கவர்னர் திரு. பிகிம்சென் சாசார் இலங்கையின் இந்திய ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார். திரு. சாசாருக்கு தற்பொழுது வயது 71.

## மந்திரி இன்று வருகிறார்

மாவிட்டபுரம், வெள்ளி

கிராம கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனாநாயக்கா நாளை காலை 11 மணிக்கு காங்கேசன்துறை விமான நிலையத்தை வந்தடைவார். மந்திரி காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கும், சுன்னாகம் உப மின்சார நிலையத்திற்கும் விஜயம் செய்வார்.

தமிழரசு கட்சியினர் மந்திரியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்களென்றும் உத்தியோக பூர்வமான வைபவங்களில் கலந்துகொள்ளமாட்டாரென்றும் தமிழரசு கட்சி எம். பி. ஒருவர் தெரிவித்துள்ளார்.

## விமான ஒத்திகை

எல்சென்டரோ, அக். 29

இரண்டு என்ஜின்கள் கொண்ட தாக்குதல்ஜெட்வெடி விமானம் ஒன்று பரீட்சார்த்த ஒத்திகையில் ஈடுபட்டிருந்த போது நொருங்கியதால் 6 பேர் மாண்டனர். 20 பேர் காயமடைந்தனர்.

## ஸ்ரீமாவுக்கு அமோக வரவேற்பு ஏற்பாடு

கொழும்பு, வெள்ளி

இலங்கை-இந்தியர் பிரச்னை சம்பந்தமாக சரித்திரப்பிரசித்திவாய்ந்த ஒரு தீர்வுக்கு வந்த பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்காவை குதூகலமாக வரவேற்க ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், சமசமாஜக்கட்சியும் ஜரூராக ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

ராதா குரு பற்பொடி


பற்களை வெண்மையாக்கி, வாய் நாற்றத்தைப் போக்கி, பற்களுக்கு பூரணமான பாதுகாப்பளிக்கிறது. பல்வலி, பல் அரணை, முரசு கரைதல் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணமளிக்கும்.
தயாரிப்பாளர்கள்: ராதா புறடக்ஸ்
விநியோகஸ்தர்கள்:
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

போன்: 296 தந்தி: 'ரோகிணி'
தீபாவளி விற்பனை அழைப்பு
19-10-64 தொடக்கம் 3-11-64 வரை
S. R. S.
ஜவுளி மாளிகையில்
மங்களகரமான தீபாவளிப் பண்டிகைக்காக
ஏராளமான பிடவைத்தினுசுகளை வரவழைத்திருக்கிறோம்.
தங்களுக்கு தேவையான ஜவுளித்தினுசுகளை
முன்னதாகவே வந்து தெரிவு செய்யுங்கள்:
சென்ற ஆடி மாதம்
மலிவு விற்பனை செய்த ஜவுளிமாளிகை
எஸ். ஆர். செல்லத்துரை
(கதிரேசன் கோவிலுக்கும் மீட்டாஸ் கடை சந்திக்கும் இடையில் உள்ளது)
216, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்

**மணிவாக்கு**

உண்மையை, அன்பை, தூய உள்ளத்தை எதுவும் எதிர்த்து நிற்க முடியாது. நீங்கள் மட்டும் உண்மையானவர்களாகவும், அன்புடையவர்களாகவும் இருந்தால்போதும். யாருக்கும் பயப்படவேண்டியதில்லை.

—சுவாமி விவேகானந்தர்.


ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

வாழ்வானாம் குரோதி ஆண்டு ஐப்பசி ௴ 14 உ (30-10-64)


## கொழும்புத் திட்ட உதவி

தென், தென்கிழக்குஆசிய பிராந்தியத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றபோதிலும் ஜனப்பெருக்கமும் விலைவாசி உயர்வும் பெரும் பிரச்னைகளாக உள்ளன என்று தொழில்நுட்ப ஒத்துழைப்பு சம்பந்தமாக கொழும்புத்திட்டச்சபையின் அறிக்கை குறிப்பிட்டிருப்பது இலங்கையின் கவனத்தை ஈர்க்க வேண்டும்.

கொழும்புத்திட்ட பிராந்தியத்தில் தொழில்நுட்ப ஒத்துழைப்பைத் தீவிரப்படுத்த வேண்டுமென்றும் தென் கிழக்கு ஆசிய பிராந்தியத்துக்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பு சம்பந்தப்பட்டகொழும்புத்திட்டசபையின் பதின்மூன்ருவது வருடாந்த அறிக்கை கூறுகிறது. தொழில்நுட்ப நிபுணர்களையும், இயந்திரங்களையும் பெருமளவில் மேலும் அளிப்பதென்பதோ தொழில்நுட்பப் பயிற்சியளிப்பதென்பதோ இதன் அர்த்தமாகாது. ஏற்கனவே அளிக்கப்பட்ட இயந்திர சாதனங்களையும் தொழில்நுட்ப நிபுணர்களின் உதவிகளையும் அளிக்கப்பட்ட பயிற்சிகளையும் சரிவர, தீவிரமாக உபயோகிக்க வேண்டுமென்பதும் அவற்றைப் பயன்படுத்தி அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவது நமது நாட்டின் பொறுப்பு என்பதுவுமே அந்த அறிக்கை கூறும் கருத்தாகும். இதேசமயம் சில தினங்களுக்குமுன் வெளிவந்த ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கையில் கொழும்புத் திட்டத்தின் கீழும் இதர உதவித்திட்டங்களின் கீழும் நமது நாட்டுக்கு அளிக்கப்பட்ட பெறுமதி வாய்ந்த இயந்திர சாதனங்கள் உபயோகிக்கப்படாமல் வெய்யிலிலும் மழையிலும் கிடந்து சீர்கேடடைந்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதையும் அரசாங்கம் கருத்தில்கொள்ள வேண்டும்.

இலங்கையுடனும் இலங்கைக்குப் பின்னரும் விடுதலையடைந்த தென்கிழக்காசிய நாடுகள் பல கொழும்புத்திட்டத்தின் கீழும் இதர உதவித் திட்டங்களின் கீழும் பெற்ற உதவியைச் சரியாகப்பயன்படுத்தி அபிவிருத்தித்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளன. இலங்கையைப் பொறுத்தவரையில் எந்த அபிவிருத்தித் திட்டத்தையும் சரிவர நிறைவேற்ருதது மட்டுமல்ல கிடைத்த உதவிகளைப் பயன்படுத்தவும் தவறிவிட்டது.

இலங்கையில் எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற முடியும். அதற்கான சகல வசதிகளும் ஆள்பலமும் போதியளவு இருக்கின்றன. ஆனல் ஆட்சிபீடத்தில் இதுவரை அமர்ந்த அரசாங்கங்கள் நாட்டின் பொருளாதார விடுதலையைப்பற்றிக் கவனம் செலுத்தாது பதவிக்கு வருவதற்கான குறுக்கு வழிகளில் கவனம் செலுத்துவதிலும் மொழி, இன, மத வேற்றுமைகளைத் தூண்டிநாட்டின் ஐக்கியத்தைக் குலைக்கும் சட்டதிட்டங்களையும் நிர்வாகரீதியான நடவடிக்கைகளையும் செய்வதிலுமே அரசாங்கம் தனது காலத்தைச் செலவிட்டுள்ளது. இதற்கு மாருக நாட்டின் ஐக்கியத்தையும் சகல சமூக மக்களின் ஒற்றுமையையும் பேணக்கூடிய நடவடிக்கைகளை அரசாங்கங்கள் மேற்கொண்டிருந்தால் கிடைத்த உதவிகளைப் பயன்படுத்தி பல அபிவிருத்தித்திட்டங்களையும்நிறைவேற்றியிருக்கலாம். உழைப்புச் சக்தியைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அதை வெளியேற்ற வேண்டும் எனக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் கண்களை கொழும்புத் திட்டசபையின் இந்த அறிக்கை திறப்பதாக இருக்க வேண்டும்.

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாத்து தேசிய அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி நாட்டின் பொருளாதார விடுதலைக்கு வழிவகுக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் இனியாவது மேற்கொள்ள வேண்டும்.

# தமிழுக்கு உத்தியோகமொழி அந்தஸ்து; அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம்

## புதிய 'ஐக்கிய தமிழ் சுதந்திரக்கட்சி'யின் கொள்கைகள்

சென்ற சனிக்கிழமை கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட ஐக்கிய தமிழர் சுதந்திரக்கட்சி எனும் புதிய அரசியல் கட்சி தனது கொள்கைத் திட்டம் பற்றித் தெரிவித்துள்ளது. இந்த நாட்டிலுள்ள அரசாங்கத்தில் தமிழ் மக்களும் உரிய பங்கு பெறவும் இலங்கையின் தேசிய வாழ்விலி சகல துறைகளிலும் இவ்வித பங்கு கொள்ளும் வகையிலும் கட்சி உழைக்கும் என்றும் பொதுவாக தமிழரின் நலனைப் பாதுகாக்கப் பாடுபடுவதும் கட்சியின் கொள்கைகளாக இருக்கும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. தமிழை உத்தியோக மொழியாக்கவும் கட்சி உழைக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

கட்சியின் இதர கொள்கைத் திட்டம் வருமாறு:-

இலங்கை அரசியல் கட்டத்தில் இலங்கை வாழ் மக்களின் அடிப்படை உரிமைகள் சேர்த்துக் சொன்னப் படுவதற்காக கட்சி உழைக்கும்.

இலங்கை வாழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் இலங்கை சுப்ரீம் கோர்டுக்கு போதியளவு சட்டபூர்வமான அதிகாரங்கள் இருப்பதற்கு முயற்சி மேற்கொள்ளுதல்.

தமிழையும் உத்தியோக மொழியாக்கவும் ஆங்கிலத்தை துணை மொழியாக்கவும் வகை செய்யக் கூடிய விதத்தில் இலங்கைக்கு உகந்த மொழிக் கொள்கையொன்றை உருவாக்க உழைத்தல்.

ஆரம்ப வகுப்பிலிருந்து பல்கலைக்கழகப் படிப்புவரை சிங்களத்துடனும் ஆங்கிலத்துடனும் தமிழ் தனக்குரிய கௌரவமான இடத்தைப் பெறுவதற்கு ஏற்ற கல்விக் கொள்கையொன்றை உருவாக்க உழைத்தல்.

பொது மக்களின் நலனுக்காகவும் கலாசார, பொருளாதார, விவசாய, கைத்தொழில் விருத்திக்கு உழைத்தல்.

தமிழ் பேசும் மக்கள் வாழ் பகுதிகளிலும் கொழும்பிலும் பல்கலைக் கழகங்களை உருவாக்க முயற்சி மேற்கொளளுதல்.

இலங்கையிலுள்ள வரண்ட பிரதேசங்களுககு நல்ல நீர்ப்பாசன வசதிகள் அளித்து அவற்றை விருத்தி செய்து நாடு உணவு விஷயத்தில் சுய தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் உழைத்தல்.

சர்வதேச மனித சகோதரத்துவ அடிப்படையில், சாதிப் பாகுபாடு மற்றும் சமுகத்தில் காட்டப்படும் ஏற்றத்தாழ்வு இவற்றை நீக்கி சமூகநீதியை நிலைநாட்ட முயற்சிமேற்கொள்ளுதல்.

ஸ்தலஸ்தாபன சபைகளை விரைவாக விரிவுபடுத்தவும் அவற்றுக்குள்ள அதிகாரங்களை அதிகரிக்கவும் வழி செய்தல்.

தற்போதுள்ள மந்திரிசபையிலமைந்த அரசாங்கத்துக்கு பதில் கமிட்டி முறையை உருவாக்க உழைத்தல்.

இந்நாட்டில் வாழும் சகல சமூகத்தைச் சேர்ந்த மக்களும் தமது தேவைகளையும் பெற்றுக் கொள்ளக் கூடியவகையில் ஏற்றதொரு ஜனநாயக அரசாங்கம் இருக்கக்கூடிய விதத்தில் அரசியல் சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளஉழைத்தல்.

சமூகசௌஜன்யத்தையும் தேசிய ஒற்றுமையையும் உருவாக்க உழைத்தல்.

சுதேசியசமுதாயத்தைக்கட்டி எழுப்பும் வேலையில் சிங்கள மக்களுடனும் இலங்கையிலுள்ள மற்ற சமூகத்தவருடனும் சமபங்காளர்களாகச் சேர்ந்து உழைத்தல்.

சமூக உரிமைக்கும் பேச்சு சுதந்திரத்துக்கும் பத்திரிகை சுதந்திரத்துக்கும் பாடுபடுதல்.

இலங்கையிலும் வெளியிலும் ஐ. நா. சாசனத்தை செயல்படுத்தக் கூடிய வகையில் உழைத்தல்.

ஐக்கிய இலங்கையை உருவாக்க உழைத்தல்.

சர்வதேச சமாதானத்தையும், அமைதியையும் உலகில் நிலைபெறச் செய்ய உழைத்தல்.

மதுவிலக்கு இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் துணி உட்பட மற்றப் பொருள்களையும் இங்குள்ளவர்கள் உபயோகிக்க வழிசெய்தல் ஆகியவற்றுக்காகவும் கட்சி உழைக்குமென்றும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியருக்குக்கடிதம்

## தீபாவளித்தினம்

செவ்வாய்க்கிழமை தீபாவளி புலர்கிறது! சதுர்த்தசி திதி கூடிய காலத்தில், கேதார கௌரி விரதம், அமவாசை விரதம் பொருந்திய ஐப்பசி மாத நாளில் (3-11-64) மிக விசேட சரித்திரவரலாறுக உள்ளது தீபாவளி! மேலும் நல்ல கலை அறிவை அறிந்து மக்கள் உய்யும்படி வெளிபடுத்துகிறது இத்தீபாவளி!

ஆகவே பழமையிலிருந்து புதிய காலத்தை நாம் நல்லறிவாகப் பயன்படுத்தவேண்டும். புண்ணியமானது, கௌரவத்தை வளர்க்குமென்றும், பாவக்கொடுமையானது, கௌரவத்தைவிடச் செய்யுமென்றும் இச்சந்தர்ப்ப நாளில் மிகத் தெளிவாகநாம்அறியவேண்டும். உலக சரித்திரங்களோடு இவைகளின் உண்மைகளை நாம் ஒட்டிப்பார்க்கவேண்டும்.

புண்ணிய வான்தோன்றும் போது கௌரவம் வளரும்! கொடிய பாவி தோன்றும் போது, கௌரவம் மறைந்து பாவம் தலைவிரித்தாடும்!! பாவத்தை அடக்குவதை, இப்புண்ணிய நாளன்று செய்து காட்டியுள்ளது!!! இன்றும் என்றும் எம்மை நினையுங்கள் எனப் புகல்கிறது; எச்சரிக்கை செய்கிறது இந்த நாள்.

அன்றுள்ள, கொடிய நரகாசூரனை-நாம் மறக்க முடியாது. திருமால் அவதாரத்தில், அன்றுள்ள இவ்வசுரனை அதஞ்செய்து, புண்ணியம் காத்துப் பெருக்கிய கௌரவத்தை, நாம் மறக்க முடியாது. இதன் நிமித்தமாக கோடியுடை உடுக்கும் வாய்ப்பும் தீபம் ஏற்றித் தீபாவளி கொண்டாடும் அதிகாலை நேரவாய்ப்பும் நரகாசுரன் அழிந்தான் என்று அப்பியங்கதஸ்நானஞ் செய்யும் வாய்ப்பும் நினைவுத் திருநாளாயிற்று! திருமாலின் மெய்க்கீர்த்திப் பிரதாபத்தை,என்றி நினைக்கச் செய்யும் புண்ணிய நோன்புநாளாயிற்று!!

கைமாறு கருதாத பரோபகாரப் பெரியோர்கள், தீபாவளித் தொண்டில் தீமைவளராது, புண்ணியம் வளரப் பெருந்தொண்டு செய்தல் நன்ருகும்.

வித்துக்கலைஞன் ஆசி
சாந்தகுரு,
சன்மார்க்க தவகூடம்,
கந்தரோட்.

தீபாவளி

## வியாபாரத்தில் மந்தநிலை!

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்திலுள்ள பல தனியார் துறை ஜவுளிக் கடைகளிலும் இம்முறை தீபாவளி வியாபாரம் முந்திய வருடங்களைப் போல் சிறப்பாகஇல்லை. வியாபாரம் மந்தமாகவே காணப்பட்டது. இது சம்பந்தமாக இங்குள்ள பல கடைகளையும் எமது நிருபர் விசாரித்த போது பலரும் ஏமாற்றமான முறையிலேயே பதிலளித்தனர்.

தனியார் துறைக்கு வழங்கப்படும் இறக்குமதி சலுகைகள் மீது அதிகமான கட்டுப்பாடுகள் இருப்பதே வியாபார மந்தநிலைக்கு காரணமென்று பலரும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

குறிப்பாக வேட்டிகள் அதிகமாகவிருந்தும் வேட்டி விற்பனை, தனியார் துறையில் படுமோசமாக இருக்கிறதென்றும், கூ. மொ. வி. ஸ்தாபனம் வேட்டிகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதே இதற்குக் காரணமென்றும், வியாபாரிகள் தெரிவித்தனர்.

தீபாவளிக்கு போதுமான பல ரக துணிகள் தனியார் துறையில் இருந்தபொழுதிலும் துணி வாங்குபவர்கள் தனியார் துறையை நாடுவதில்லை என்று சில வியாபாரிகள் குறைப்பட்டுக்கொண்டனர்.

## கேரளத்தில் உணவு ரேஷன்

புதுடில்லி, அக். 29

கேரளத்தில் உணவு ரேஷன் முறை அமுலுக்கு வரும் என மத்திய மந்திரி சுப்ரமண்யம் அறிவித்தார்.

ஒரு நபருக்கு தினசரி 6 அவுன்ஸ் அரிசியும், 4 அவுன்ஸ் கோதுமையும் வழங்கப்படும் என அவர் அறிவித்தார்.

## ஐயாறன் எழுதுவது

புண் சுமந்த மேனியனை நீங்கள் பார்த்தீர்களோ? திருக்கேதீச்சரத்திலே போர்த்துக்கீசரால் மொத்துண்டு புண்பட்ட பழைய சிவலிங்கப்பெருமான் மூலஸ்தானத்துக்கு நேர் பின்புறத்தே அழகான மண்டபத்தில் வீற்றிருக்கின்ருர். அதிகாலையிலேயே அன்பர்கள் ஒரு சுவாமியாரின் தலைமையில், பாலாவிக்குச் சென்று ஸ்நானம் செய்து, தலையில் தீர்த்தக்குடத்துடனே, தேவார திருவாசகங்கள் பாடிக்கொண்டு பயபக்தியுடன் கோவிலுக்கு வந்து காசியில் செய்வதுபோல் தாங்களே அந்தப் புராதன லிங்கத்துக்கு அபிஷேகம் செய்கிருர்கள். இதற்குக் கட்டணமாகச் செலுத்தும் ஒரு ரூபாய் திருப்பணி நிதிக்குச் சேருகின்றது.

அப்பெருமானைத் தரிசிக்கையில் அந்தப் பழைய கதையெல்லாம் நினைப்பு வந்தது. நன்றல்லாத காரியங்களை எல்லாம் அன்றே மறந்து விடுவதுதான் நல்லது, என்ருலும் மறக்க முடியவில்லையே.

போர்த்துக்கேயர் செய்த அவ்வித "ஈனச்செயலை" மைட்ராபோலிட்டன் என்ற இலங்கை கிறிஸ்தவ பெரிய குருவே பகிரங்கமாகக் கண்டித்துள்ளார். அச்செயல்களுக்காக இன்றுள்ளவர்கள் மீது பழிவாங்கப்படாதென்றும் சரியாகக் கேட்டுக் கொண்டுள்ளார்.

* * *

வத்திக்கானில் கூடிய கத்தோலிக்க பெரிய குருமார் சபையினர், முன் காலத்தில் மற்றக் கிறிஸ்தவர்களுக்கு கத்தோலிக்கரால் செய்யப்பட்ட தீங்குகளுக்காக வருந்துவதாகவும், அவர்களிடம் மன்னிப்புக் கேட்பதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளதைப் பற்றி அன்று குறிப்பிட்டேன், அதன் பயனாக கத்தோலிக்கருள்ளிட்டு எல்லாக் கிறிஸ்தவர்களிடையேயும் புதிய ஒற்றுமையும் நல்லுறவும் உதயமாகி வருகின்றது. நமது தவறுகளுக்காக மன்னிப்புக் கோருவதன் மூலம், பழைய மனக்கசப்புகளெல்லாம் ஆச்சரியமாக மறைய முடியும்.

இந்நாட்டில் மட்டுமன்றி இந்தியாவிலும் பல இந்து, பௌத்த கோவில்களை போர்த்துக்கேயர் கத்தோலிக்க சமயத்தின் பெயரால் இடித்து நாசமாக்கி அக்கிரமங்கள் செய்திருக்கின்ருர்கள். பத்திரிகைக் கமிஷனும் தங்கள் அறிக்கையிலே இதைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தேன். என்ன எழுதியுள்ளனர் தெரியுமா?

"திருக்கோணமலை, தேவிநுவரா கோவில்கள் அக்காலத்தில் ஆசியாவிலேயே மிகவும் உன்னதமானவை. அவை மிகக் கொடுமையாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் அவை மிகவும் புனிதமானவை. அதேபோல களனி கோவிலும் இந்நாட்டில் புனிதமான வழிபடு ஸ்தலமாகும். புத்தர் பெருமானின் புனித திருவடிகள் அங்கு பட்டதாகவும் சொல்லுகின்றனர். இந்த மகத்தான கோவில்களுக்கு எல்லாம் என்ன நேரிட்டது? ஜேமன் கத்தோலிக்க திருச்சபையை பக்தியுடன் பின் பற்றிய போர்த்துக்கேயர்கள், மற்றவையுடன் இக்கோவில்களையும் தகர்த்துத் தரைமட்டமாக்கி விட்டனர். இவற்றை இடித்ததுடன் நில்லாது, அங்கு பசுக்களை வேண்டுமென்றே கொன்று புனிதம் கெடுத்தனர். அங்கிருந்த அரசமரங்களையும் வெட்டி, சம்மட்டியால் புனித விக்கிரகங்களையும் உடைத்தார்கள். போர்த்துக்கேயமன்னர் கோவாவிலிருந்த தமது வைசிராய் மூலம்

(6-ம் பக்கம் பார்க்க)

# இந்தியர் பிரச்னையை தீர்க்க இருபிரதமர்களும் பகீரத பிரயத்தனம்

## 5,25,000 பேருக்குமேல் தான் ஏற்கமுடியாதெனசாஸ்திரிஅறிவிப்பு

### பிரதமரின் இலங்கை பயணம் மேலும் ஒத்திவைப்பு

புதுடில்லி, அக். 29

இலங்கை இந்தியர் பிரச்னைபற்றி இருநாட்டுப் பிரதமமந்திரிகளும் நேற்று ஒரு முடிவுக்கு வரப் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். நேற்றுமாலை 3-30 முதல் இரவு 10 மணிவரை இருபிரதமர்களும் ஏழுதடவை சந்தித்து இப்பிரச்னை பற்றி பேசியதாகத் தெரிகிறது. இன்னும் சில கருத்துவேற்றுமைகள் இருப்பதாயும் எண்ணிக்கை சம்பந்தமானதே அது என்றும் கூறப்படுபடுகிறது.

ஸ்ரீமதி டண்டாரநாயகா தமது இலங்கைப்பயணத்தை மேலும் ஒத்திவைத்திருக்கிறார். நேற்று இருதரப்பிலும் கடுமையான பேரம் இருந்ததாயும், குறிப்பாக இலங்கையின் தரப்பில் அது அதிகமாக இருந்ததாயும் அறிவிக்கப்பட்டது.

திரு. சாஸ்திரி இப்பிரச்னையைத் தீர்க்க எல்லா முயற்சிகளும் மேற்கொண்டதாயும் பலமுறை இலங்கைப் பிரதமரைச் சந்தித்ததாயும் அறிவிக்கப்பட்டது.

இருதரப்பு மந்திரிகளும் பலமுறை சந்தித்துப் பேசினர்.

ஒரு கட்டத்தில் எத்தனை பேரைத் திரும்பப் பெறுவது என்ற விஷயமாகபொதுவான உடன்பாடு ஏற்பட்டதாயும், பின் எண்ணிக்கையில் கருத்துவேற்றுமை எழுந்ததாயும் கூறப்படுகிறது.

3 லட்சம் இந்தியர்களுக்கு பிரஜாஉரிமை வழங்க இலங்கை உடன்பட்டதென்றும், கடைசியாக இந்தியா தான் 5,25,000 பேருக்குமேல் ஏற்கமுடியாது என அறிவித்துவிட்டதாயும் கூறப்பட்டது.

---

## இந்திய மத்திய மந்திரி தாஸப்பா காலமானர்

### பங்களூரில் தகனம்

புதுடில்லி, அக். 29

இந்திய தொழில், சப்ளை மந்திரி திரு. எச். ஸி. தாஸப்பா இன்று அதிகாலை மாரடைப்பால் காலமானர். அவருக்கு வயது 69. நேற்றிரவு 8-30க்கு திடீரெனச் சுகவீனமுற்ற அவர் அதிகாலை 1-30க்கு உயிர்நீத்தார்.

திரு. தாஸப்பா சமீபத்தில் தான் ஸாம்பியாவிலிருந்து திரும்பினர். அந்த நாட்டின் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ள இந்தியத் தூதுகோஷ்டிக்குத் தலைமைவகித்து அவர் சென்றிருந்தார். கென்யா, உகண்டா ஆகிய நாடுகளுக்கும் அவர் அப்போது சென்றிருந்தார்.

நேருவின் மந்திரிசபையில் திரு. தாஸப்பா, 'காபினெட்' அந்தஸ்துள்ள ரயில்வே மந்திரியாகக் கடமையாற்றினர். பின் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவரைத் தனது மந்திரி சபையில் பாசன, மின்சார மந்திரியாக நியமித்தார். அதன்பின் தொழில், சப்ளை மந்திரியானர்.

மைசூர் ராஜ்யக் காங்கிரஸ் தலைவராகவும், அங்கு சட்டசபை உறுப்பினராகவும், பின் மந்திரியாகவும், அவர் கடமையாற்றியிருக்கிறர். பின் ராஜ்ய சபை அங்கத்தினராகவும், அதன்பின் 10 ஆண்டுகள் லோகசபை அங்கத்தினராகவும் அவர் இருந்திருக்கிறர். அரசியல் கலப்பற்ற ஏராளமான ஸ்தலஸ்தாபனங்களிலும் அவர் அங்கம் வகித்து வந்தார். சபையின் மதிப்பீட்டுக்கமிட்டித் தலைவராகவும் அவர் கடமையாற்றினர்.

திரு. தாஸப்பா சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுப் பலமுறை சிறைசென்றவர். கஷ்டங்களும், தியாகங்களும் அனுபவித்தவர்.

இன்று காலை ஜனதிபதி ராதாகிருஷ்ணன், உப ஜனதிபதி ஸகீர் ஹுசெய்ன், பிரதமர் சாஸ்திரி ஆகியோர் முதலில் தாஸப்பாவின் இல்லத்துக்குச் சென்று துக்கம் விசாரித்தனர். ஜனதிபதி ராதாகிருஷ்ணன் அவரது உடலில் மலர்வளையம் ஒன்றை வைத்தார். மத்திய மந்திரிகளும், ஏராளமான பொதுமக்களும் அவரது இல்லத்துக்குச் சென்று துக்கம் விசாரித்தனர்.

திரு. தாஸப்பாவின் சடலம் இன்றுகாலை 8-30க்கு ஐ.ஏ.எம். படை விமானமொன்றில் பங்களூருக்கு எடுத்துச்செல்லப்பட்டது. பங்களூர் விமானநிலையத்திலிருந்து ஊர்வலமாக அது எடுத்துச்செல்லப்பட்டு, தகனம் செய்யப்பட்டது.

மந்திரியின் மரணத்தையொட்டி நாடு முழுதுமுள்ள மத்திய அரசாங்கக் காரியாலயங்கள் இன்று மூடப்பட்டன. கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. ராஜ்யங்களும் இவ்வாறு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்த மரணச் செய்தியைக் கேட்டுத் தாம் அதிர்ச்சியடைந்ததாக மைசூர் முதன்மந்திரி திரு. நிஜலிங்கப்பா கூறினர்.

---

## 151 தி. மு. க. ஊழியர் கைது

சேலம், அக். 29

நேற்று சேலத்தில் தபால், தந்திக் கந்தோர்கள்முன் "ஹிந்தி எதிர்ப்பு" போராட்டத்தில் மறியல் செய்த 151 தி. மு. க. ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் திரு. கே. ராஜாராம், திரு. கந்தப்பன் ஆகிய பார்லிமெண்ட் உறுப்பினர்களும், 8 எம். எல். ஏக்களும் இருக்கின்றனர். இதுவரை மொத்தம் 1800 தி. மு. க. ஊழியர்கள் சிறை சென்றிருக்கிறர்கள்.

---

## சென்னையில் ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, அக். 29

ஜனதிபதி ராதாகிருஷ்ணன் இன்று சென்னை புறப்பட்டார். அங்கு அவர் இரு தினங்கள் தங்குவார்.

---

## "குருஷ்சேவ் போனது சரியே" — கோமுல்கா

வார்ஸா, அக். 29

ரஷ்ய தலைமைப் பீடத்திலிருந்து குருஷ்சேவ் அகற்றப்பட்டது நியாயமானதே என போலந்து கம்யூனிஸ்ட் தலைவர் திரு. கோமுல்கா அறிவித்தார். சீன-ரஷ்ய ஒற்றுமைக்கு முயற்சிக்கவேண்டும் என்றும் அவர் கூறினர்.

---

## சூடானில் புதிய அபிவிருத்திகள்

கார்ட்டூம், அக். 29

சூடானில் புதிய குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதாயும், ராணுவம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. கார்ட்டூம் விமான நிலையம் மூடப்பட்டிருக்கிறது.

---

## மால்டா, ஸாம்பியா

நியுயோர்க், அக். 29

மால்டா, ஸாம்பியா இரு நாடுகளையும் ஐ. நா. வில் சேர்த்துக்கொள்ளுமாறு பிரிட்டன் பிரேரிக்கும் என அறிவிக்கப்பட்டது.

---

தென் ரொடீஷியா

## பிரிட்டிஷ் பிரதமருக்கு அமெரிக்கா ஆதரவு

### தென்னுபிரிக்கா ஒன்றும் பேசவில்லை

லண்டன், அக். 29

தென் ரொடீஷியா ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்தால் அதனுல் அனர்த்தம் விளையும் என பிரிட்டன் விடுத்த எச்சரிக்கைக்கு இன்னும் அந்நாடு பதிலளிக்கவில்லை என லண்டனில் அறிவிக்கப்பட்டது.

பிரிட்டனின் எச்சரிக்கை குறித்துதென் ரொடீஷிய பர்லிமெண்ட இருநாள் விவாதம் நடத்தி வருகிறது.

அதேசமயம் லண்டனில் பிரிட்டிஷ் மந்திரி சபை கூடி தென்ரொடீஷியாபற்றி ஆலோசனை நடத்தியது. இங்குள்ள தென்ரொடீஷியத் தூதர் பிரிட்டிஷ் காலனி மந்திரி திரு. பொட்டம்லியைச் சந்தித்துப் பேசினர்.

தென்ரொடீஷியாவிஷயமாக இன்னும் ஒரு சமரச ஏற்பாடு சாத்தியமே என பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் கருதுவதாயும் அறிவிக்கப்பட்டது. அரசியலமைப்பு மகாநாடு ஒன்றை நடத்தலாம் எனவும் யோசனை கூறப்படுகிறது.

ஸாலிஸ்பரியில் பிரிட்டிஷ் எச்சரிக்கை அவமானமும், பயமுறுத்தலும் என ஒரு சாராரும், தென்ரொடீஷியாமீது பொருளாதார நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது அழிவுக்கு வழிகோலும் என மற்றோர் சாராரும் அபிப்பிராயப் படுகிறர்கள்.

தென் ரொடீஷியா பற்றிய பிரிட்டிஷ் நிலையை நேற்று அமெரிக்கா ஆதரித்தது.

தென் ஆபிரிக்கா இதுபற்றி எதுவும் கூறவில்லை.

---

## 'பதவி ஆசை பிடித்தவர்'

### ஜோன்ஸன் மீது கோல்ட்வாட்டர் தாக்கு

நியுயோர்க், அக். 29

"சோஷலிஸ்ட் அமெரிக்காவுக்கு வழிவகுக்கும்விஷயத்தில் ஜோன்ஸன் மக்களின் சம்மதத்தை விரும்புகிறர். அமெரிக்க அரசியலில் பதவி ஆசை பிடித்தவர் எவருமில்லை. தேர்தலுடன் மட்டும் அவருக்குத்திருப்தியில்லை. தனக்கு முடிசூட வேண்டுமென விரும்புகிறர். அவருக்குப் பூரண நம்பிக்கையும், பூரண அன்பும், உங்கள் உயிர் மீது பூரண அதிகாரமும் வேண்டுமாம்" என கோல்ட்வாட்டர் தேர்தல் பிரசாரம் ஒன்றில் கூறினர்.

---

## புவனேஸ்வரத்தில் ஊரடங்கு உத்தரவு பிரகடனம்

### ஆர்ப்பாட்டத்தின் விளைவு

புவனேஸ்வரம், அக். 29

ஒரிஸ்ஸா தலைநகர் புவனேஸ்வரத்தில் மாணவர்கள் பொலிஸ் ஸ்டேஷனுக்கு நெருப்பு வைக்க முயன்றதால் முதலில் தடியடி, கண்ணீர்ப் புகையைப் பொலிஸார் பிரயோகித்தனர். ஆனுல் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன் காரணமாக ஒரு சிறுவனின் உடலுக்குள் ஒரு குண்டு பாய்ந்ததென்றும் எவரும் இறக்கவில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.

100 பொலிஸாரும், அதிகாரிகளும், 10 ஆர்ப்பாட்டக்காரர்களும் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

மாணவர்கள் கல்மாரிபொழிந்தார்களென்றும் ஒரு மந்திரிக்கும், ஒரு அதிகாரிக்கும் சொந்தமான இரு கட்டிடங்களுக்கு அவர்கள் தீ மூட்டினர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது, தீயணைக்கும் என்ஜின்கள் அங்கு வராதபடியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தடை செய்தனர்.

இதுசம்பந்தமாக 11 மாணவர் கைது செய்யப்பட்டார்கள்.

நிலைமை நெருக்கடியாகவிருப்பதாயும், ஆனுல் கட்டுப்பாட்டில் இருக்கிறதென்றும் அதிகாரிகள் அறிவித்தார்கள்.

---

## "வெர்வூடின் அரவணைப்பில் ஸ்மித் சென்று விடலாம்"

### தென்ரொடீஷியா பற்றி "கார்டியன்"

லண்டன், அக். 29

ரொடீஷிய நிலைமையில் ஒரு தவருன திருப்பம் ஏற்பட்டால் அது தென் ரொடீஷியப் பிரதமர் ஸ்மித்தை, தென்னுபிரிக்க பிரதமர் வெர்வூடின் அணைப்பில் கொண்டுசெலலும் என "கார்டியன்" பத்திரிகை கூறியது.

"இதை அனைவரும் நினைவிலுறுத்திக் கொள்ளுதல் அவசியம்" என்றும் இந்த லிபரல் பத்திரிகை கூறியது.

திரு. வில்சனின் எச்சரிக்கை நியாயமானது. பிரிட்டனின் எந்தக் கட்சி பதவிக்குவந்தாலும் காமன்வெல்த் நாடுகளின் பேராதரவு அதற்கு உண்டு என்றும் அடிப்படையிலேயே அரசாங்கத்தின் போக்கு அமைகிறது.

ஆபிரிக்காவின் கருத்துக்கு மாருக திரு. ஸ்மித் செயல்படுவது தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவோ அல்லது பின்வாங்கவோ முடியாத நிலையை திரு. ஸ்மித்துக்கு உண்டாக்கியிருக்கிறது. தென் ரொடீஷியப் பிரதமர் லண்டன் வருமாறு அழைக்கப்படவேண்டும்" என்றும் கார்டியன் கூறியது.

---

## "குருஷ்சேவின் வீழ்ச்சியால் உலகுக்கு சாதகமான நிலை"

### ஜப்பானியரிடம் சூ கருத்து

டோக்கியோ, அக். 29

"குருஷ்சேவின் வீழ்ச்சி உலகின்எதிர்காலத்துக்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கிறது" என சீனப் பிரதமர் சூ-என்-லாய் சீனவுக்கு விஜயம்செய்துள்ள ஜப்பானிய சோஷலிஸ்ட் தூதுகோஷ்டியிடம் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டது.

சீனபற்றிய அமெரிக்க கொள்கைகளுக்கு எதிராகவே அணு சோதனை நடத்தப்பட்டது என்றும் திரு. சூ அவர்களிடம் கூறினராம்.

"அமெரிக்கா ஏராளமான அணு ஆயுதங்களை வைத்துக்கொண்டு சீனவைப் பயமுறுத்திவருகிறது. பூரண அணு சோதனை ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமெரிக்கா இசைந்தாலும்கூட இக்க ஆயுதங்களை அடியோடு ஒழிக்க நீண்டகாலம்பிடிக்கும். அந்தக்காலம் வரும்வரை சீன அனேக அணு ஆயுதங்களை வைத்திருக்க வேண்டும்" என சீனப்பிரதமர் கூறினர் என்றும் அறிவிக்கப்பட்டது.

---

## வாக்கர் திரும்பினர்

லண்டன், அக். 29

அமெரிக்கா சென்றிருந்த பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி லண்டன் திரும்பினர். அமெரிக்காவும், பிரிட்டனும் நல்லநேச உணர்வுடன் இருப்பதாய் அவர் தெரிவித்தார். பிரதமர் வில்சன் வருகிற டிசம்பர் அல்லது ஜனவரியில் அமெரிக்க ஜனதிபதியைச் சந்திப்பார் என்றும் அவர் கூறினர்.

# "ஊழல்களை மறைக்கவே பத்திரிகை மசோதா"

## திரு. சிவசிதம்பரம் கருத்து

"பருத்தித்துறை, வியாழன் எந்த ஜனநாயக ஆட்சிக்கும் சுதந்திரமாக இயங்கும் பத்திரிகைகள் அவசியம். ஏன் என்ருல் பாராளுமன்றத்தில் உள்ள ஆளும் கட்சியினர் தமது அதி வாக்குப்பலத்தால் சாதிக்க முனையும் தகாத செயல்கள் பற்றி மக்கள் அபிப்பிராயத்தை பத்திரிகைகளால்தான் கூறமுடியும்."

இவ்வாறு உடுப்பிட்டி எம்.பி. திரு மு. சிவசிதம்பரம் கரவெட்டியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

"எத்தனையோ பிரச்னைகள் தீர்க்கப்படாது வளர்ந்து வரும் இதே வேளையில் அவைகள் பற்றி எதுவித அக்கறையும் காட்டாது ஆமை வேகத்தில் அவற்றை அணுகும் அரசாங்கம் பத்திரிகைகள் மசோதாவை அசுரவேகத்தில் நிறைவேற்றிவிடத்துடிப்பதன் காரணம் புரியாதபுதிராக இருக்கிறது

இநாட்டில் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த அரசாங்கம் முயல்வதன் முதலாவது படியாக இது இருக்கவேண்டும். இல்லையேல் இலங்கை வானெலி போல் பொய்ப் பிரசாரங்கள் செய்யப் பத்திரிகைகளையும் பயன்படுத்தி ஆட்சிக்கு மீண்டும்வருவதாகவும் இருக்கலாம் என்று திரு. சிவசிதம்பரம் மேலும் கூறினர்.

வேலையில்லாத்திண்டாட்டம், வாழ்க்கைச் செலவு உயர்வு, சிறுபான்மையோர் பிரச்னை இவைகள் பற்றி மக்கள் அதிருப்தியை மறைக்கவும் [illegible] நிதிநிலைமை, மக்கள் வங்கி ஊழல், மந்திரிமார்கள் [illegible] பட்ட ஊழல்கள் இவைகளை வெளியே பகிரங்கப்படுத்தாமல் தடுக்கவுமே இச் செயலில் தீவிரமாக முயல்கிறனர் என்றும் அவர் கூறினர்.

# நேரடி நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

மாவிட்டபுரம், வியாழன்

அகில இலங்கை அரசினர் டிஸ்பென்சரி யூனியன் 'போல்' கமிஷனின் அறிக்கையை நவம்பர் முதல் திகதிக்கு முன் அமுல் நடத்தாவிட்டால் நேரடி நடவடிக்கையிலிறங்குவது எனத் தீர்மானித்துள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் யாழ். கிளையின் விசேட பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட தலைமைச் சங்கத்தின் காரியதரிசி திரு. பொன் சேகரா பேசுகையில் கடந்த ஒன்றரைவருடகாலமாக எமது கோரிக்கைகளைத் தராது அரசாங்கம் காலந் தாழ்த்தியுள்ளதால் நவம்பர் முதல்திகதிக்கு முன் எமது உரிமைகளை 'போல்' கமிஷன் அறிக்கையின்பிரகாரம் தர நடவடிக்கை எடுக்காவிடில் நேரடி நடவடிக்கையில் இறங்கவேண்டும் என்று கூறினர் அதனை மற்ற அங்கத்தவர்களும் ஏற்றுக்கொண்டனர்

யாழ். சம்மனைத் தலைவர் திரு வே. கந்தையா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

---

# ஐ. நா. சபை ஒத்திவைப்பு

நியுயோர்க், அக். 29

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டம் நவம்பர் 10-ந் திகதியிலிருந்து டிசம்பர் 1-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. 67 நாடுகள் ஒத்திவைப்பை விரும்பியதாக அறிவிக்கப்பட்டது.

# ஆசிரியர்களின் கடமை

மாவிட்டபுரம், வியாழன்

"வாலிப குற்றங்களும் வாலிபர்களின் கெட்ட நடத்தைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. மாணவர்களை ஒழுங்கான முறையில் நடாத்துவதற்கு தலைமை ஆசிரியர்கள் தங்களாலியன்ற அளவு சிரத்தை செலுத்த வேண்டும். ஒவ்வொரு கல்லூரிகளினதும் பழங்காலந்தொட்ட பெருமையை தொடர்ந்து நிலைநாட்ட அக்கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் அயராது உழைக்கவேண்டும்" என்று தெல்லிப்பளை யூனியன் கல்லூரி எச். எஸ். ஸி. மாணவர் சங்கத்தின் இரவு விருந்துபசாரத்தின்போது பிரதம பேஷகராக கலந்துகொண்ட நீதிபதி திரு. ரி. ஜே இராசரெட்ணம் சொற்பொழிவாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு கே. எஸ். செல்லையா பேசுகையில் கூறியதாவது:

"மாணவ உலகம் எவ்வளவு முக்கியமானது என்பதை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வலியுறுத்துவதன் மூலம்தான் மாணவர்களுக்கு நற்பழக்கத்தைப் பழக்கலாம். இதையே ஆசிரியர்கள் தங்கள் முதற் கடமையாகக்கொள்ளவேண்டும்."

கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை பேசுகையில், முன்னைய அதிபர்கள் எவ்வாறு கல்லூரியின் பண்பாடுகளை வளர்த்துவந்தார்களோ அவர்களைப்பின்பற்றி கல்லூரியை வளர்க்க தான் பாடுபடுவதாகக் கூறினர்.

வழக்கறிஞர் திரு சி. எம். தருமலிங்கம் பேசுகையில், கல்லூரியை விட்டு விலகும் மாணவர்கள் இன்றைய பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு நடக்கவேண்டுமென புத்திமதி கூறினர்,

தந்தை கொலை, மகள் கடத்தல் சம்பவம்

# நவம்பர் 4-ம் திகதி குற்றப் பத்திரிகை தாக்கல்

## சந்தேக நபர்களில் ஒருவர் தலைமறைவு

யாழ்ப்பாணம், வியா.

கிளிநொச்சி பகுதியிலுள்ள இராமநாதபுரம் காலனியில் தந்தையைக் கொலை செய்து, மகளைக் கடத்திச்சென்றதாகக் கூறப்படும் சம்பவம் சம்பந்தமான வழக்கில், இன்னும் குற்றச்சாட்டு பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை.

சாவகச்சேரி கோர்ட்டில், நெற்று நீதிபதி முன்னிலையில் இச்சம்பவம்பற்றி மேலும் விசாரணை செய்யவேண்டியிருப்பதாகவும் குற்றச்சாட்டு பத்திரிகை தாக்கல் செய்யப்படுவது சம்பந்தமாக ஆலோசனை செய்ய வேண்டியிருப்பதாகவும், கிளிநொச்சி சப்-இன்ஸ்பெக்டர் திரு. தேவசகாயம் தெரிவித்தார்.

சந்தேக நபர்களில் மூவரான நடராசா அவரது சகோதரர் குணம், தனுஷ்கோடி ஆகியவர்கள் தொடர்ந்து ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களின் மற்றொருவர் இதுவரை கைது செய்யப்படவில்லை. அவர் தலைமறைவாக இருந்துவருவதாகவும், கிளிநொச்சி பொலிசார் அவரைத் தேடி வருவதாகவும் அறியப்படுகிறது. தற்பொழுது ரிமாண்டில் இருந்து வரும் மூன்று சந்தேக நபர்களும், வழக்கறிஞர் திரு. ஆர். டி. சிவகுரு மூலம் இதற்கு முந்திய தவணைகளில் சாவகச்சேரி கோர்ட்டில் சரணடைந்தார்கள்.

மீண்டும் சம்பவம் பற்றிய வழக்கு சாவகச்சேரி கோர்ட்டில் நவம்பர் 4-ம் தேதி புதன்கிழமை காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுமெனத் தெரியவருகிறது.

இராமநாதபுரம் காலனியைச் சேர்ந்த ஆறுமுகத்தைக் கொலை செய்து அவரது 17 வயது மகள் பூரணத்தை காரில் கடத்திச்சென்று, சந்தேக நபரில் ஒருவர் அவரைக் கெடுத்ததாகவும், மறுநாள் பூரணம் கிராம சேவகரிடம்முறையிட்டதாகவும் இச்சம்பவம்பற்றி கூறப்படுகிறது.

---

# சமயப்பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

இன்று அகில இலங்கை பொதுஜன சேவைச் சங்க சமயப் பிரசார சபையினரால் அதன் தலைவர் ஸ்ரீமத் மணிபாகவதர் தலைமையில் நல்லூர் தேவஸ்தான சண்முகதீர்த்த மண்டபத்தில் மாலை 6-15 மணி முதல் 8 மணிவரை சைவப் புலவர் திரு. வ. கந்தசுவாமி "ஆலயவழிபாடு" என்னும் பொருள்பற்றியும் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மாலை 6 மணிமுதல் 7 மணிவரை திரு. த. சுப்பிரமணியம் "முருகன் பெருமை" என்னும் பொருள்பற்றியும், நாயன்மார்கட்டு ராஜராஜேஸ்வரிஅம்பாள் ஆலயத்தில் திரு. க. தம்பாபிள்ளை, "சக்தி" என்னும் பொருள்பற்றியும் மாலை 7 மணி முதல் 8 மணிவரை பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் "காட்சிப்படலம்" என்னும் பொருள்பற்றியும் 2-11-64 திங்கட்கிழமை மாலை 7-45 மணிமுதல் 9 மணிவரை நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் திரு. பொன். அப்புக்குட்டி "ஆலயவழிபாடு" என்னும் பொருள்பற்றியும் பிரசங்கங்கள் நிகழ்த்துவர்.


உங்களில் அநேகம், தங்கியுள்ளது — சிறந்ததை தெரிவு செய்க, நெஸ்பிரேயை தெரிவு செய்க!




ஏன்? 8 மாதமாகியதும் வாழ்க்கையைக் கரிசனையோடு கவனிப்பர். அப்போதுதான் நீங்களும் குழந்தையின் உணவைப் பற்றி புதிதாகக் கூர்ந்து கவனிக்க வேண்டும். பால், எவருக்கும் சமனுன நல்லுணவின் ஒரு அங்கமாகும்—இன்னும் விசேஷமாக வளரும் பிள்ளைகளுக்கு.

விசேஷ குழந்தை உணவுகளை ஊட்டி, வளர்த்தபின் தொடர்ந்து சுத்தமான, செழிப்பான, நம்பிக்கையான பாலுணவையே கொடுத்தல் வேண்டும்.

அவ்வுணவே நெஸ்பிரே—முழு ஆடை நிரம்பிய பால் மா—நெஸ்லே ஸ்தாபன வாக்குரிமை பெற்ற நம்பிக்கையான பால் இதுவே,

நெஸ்பிரே சுத்தமான பசுபாலில் தயாரிக்கப்பட்டது!!

## தையற்கலை பொருட்காட்சி

பருத்தித்துறை, வியாழன்

பருத்தித்துறை பெண்கள் தையற் படசாலை மாணவிகளால் தயாரிக்கப்பட்ட தையற் கலைப் பொருட்களின் பொருட்காட்சி யொன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

தீபாவளித் திருநாள்வரை நடைபெறும் இப் பொருட்காட்சியின்போது தையல் பொருட்களின் மலிவு விற்பனையும் நடைபெறுகிறது

## பர்மா இந்தியர்

ரங்கூன், அக். 29

பர்மா இந்தியர் நாடு திரும்புவதற்கான அவசர சர்ட்டிபிக்கேட் வழங்குவது ஜனவரி மாதம்வரை நிறுத்திவைக்கப் படும் என ரங்கூனிலுள்ள இந்தியத்தூதராலயம் அறிவித்திருக்கிறது. ஏற்கனவே கப்பல்களில் இடம் நிரம்பிவிட்டதே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது. இன்னும் 42000 பேர் இந்தியா வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பருத்தித்துறை நகரசபை
## கேள்விப்பத்திர அறிவித்தல்

பருத்தித்துறை நகரசபையின் 1965-ம் ஆண்டு கீழ்க்குறிப்பிடப்படும் குத்தகைகளுக்கும், மற்றும் தேவையான பொருட்கள் கொடுப்பதற்கும் 1964-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் பருத்தித்துறை நகரசபைத் தலைவரால் முத்திரை சீல்செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 1964-ம் ஆண்டு நவம்பர்மாதம் 11-ம் திகதி 2-00 மணிவரை இக்காரியாலயத்தில் பிணைப் பணமும் கேள்விப்பத்திர நிர்ணய விலை கீழ்க்குறிப்பிட்டபடி செலுத்திப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். கேள்விப்பத்திரத்திற்காகச் செலுத்திய பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

கேள்விகள், தலைவர், நகரசபை, பருத்தித்துறை என விலாசமிட்டப்பட்டு தபால் உறையின் இடதுகை மேல்கோணத்தில் இன்னதற்கான கேள்விப்பத்திரம் என்று எழுதப்பட்டு பதிவுக்கடிதத்தின் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது சபையின் கேள்விப் பெட்டியினுள் போடப்படல் வேண்டும். இவை பற்றிய விபரங்கள் தெரியவிரும்பின் காரியாலய நேரங்களில் நகரசபைக் காரியாலயத்தில் தெரிந்துகொள்ளலாம்.

| | | பிணைப்பணம் | கேள்விப்பத்திர நிர்ணய விலை |
|---|---|---|---|
| 1. | காய்கறிச்சந்தை குத்தகை | ரூபா 250-00 | ரூபா 25-00 |
| 2. | மீன் சந்தை " | " 150-00 | " 15-00 |
| 3. | மாட்டிறைச்சிக் கடை " | " 25-00 | " 5-00 |
| 4. | வண்டில் வான்காலை " | " 50-00 | " 5-00 |
| 5. | தெரு, சந்தைக் குப்பைகள் விற்றல் | 25-00 | " 5-00 |
| 6. | நகரசபைக் காணிகளின் பிரயோசனத்தை விற்றல் | " 25-00 | " 5-00 |
| 7. | மின்சாரப் பகுதிக்கு தேவையான சாமான்கள் | " 250-00 | " 25-00 |
| 8. | கந்தோர் பாவிப்பிற்குரிய உபகரணங்கள் " | " 50-00 | " 10-00 |
| 9. | சுகாதாரவேலைப்பகுதிகளுக்குத் தேவையான சாமான்கள் | " 150-00 | " 15-00 |

தலைவர்,
நகரசபை, பருத்தித்துறை.

நகரசபைக் காரியாலயம்,
பருத்தித்துறை. 24-10-1964. 966


கடைசி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ண (திருமலை) மொடர்ன் (பதுளை)
விஜிதா (ஹட்டன்



எம். ஜி. ராமச்சந்திரன் - சரோஜாதேவி
மற்றும் பலர் நடிக்கும்
பணக்கார குடும்பம்


## வானொலி நிகழ்ச்சிகள்
### வெள்ளி 30-10-64
### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 சமயப்பாடல்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாதஸ்வரம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஞானாஞ்சலி, 7-15 பாட்டு, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-45 இஸ்லாமியகீதங்கள், 9-15 பேச்சு — "நாமும் நாடும்", 9-30 நேயர் விருப்பம், 10-00 மெல்லிசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2-00. இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 பாட்டு — அரயபுரம் என். லக்ஷ்மணன், 8-15 நதஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-00 சூரியகாந்தி: கதம்பநிகழ்ச்சி, 1-00 மணி மலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 ஒலிச்சித்திரம் — "கை கொடுத்த தெய்வம்."

மாலை 5-15 பாட்டு — அரயபுரம் என். லக்ஷ்மணன், 5-45 இசைப்பயிற்சி.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 பேச்சு — எழுத்தாளர்களும், அவர்கள் படைப்பும்", 7 45 பாட்டு — சேலம் எஸ். லீலா, 8-45 தபசல்பெட்டி, 9-30 மெல்லிசை.

## பஜனை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் பஜனைச் சபையினர் தினசரியும் வாரந்தோறும் நல்லூர்க் கந்தன் தேவஸ்தானத்திலும் திங்கட்கிழமைகளில் வண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்திலும் வெள்ளிக்கிழமைகளில் சீரணி நாகம்மாள் தேவஸ்தானத்திலும் பஜனை நிகழ்த்திவருகின்றனர்.

சென்ற செவ்வாய்க்கிழமை மாலை 8 மணியளவில் மேற்படி சபையின் பஜனை கன்னாதிட்டி மகாகாளி தேவி தேவஸ்தானத்திலும் அதன் தலைவர் ஸ்ரீ சோதிநாதனல் அங்குரார்ப்பணம் செய்யபபட்டது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் சீரணி நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் திரு. சீ. வினசித்தம்பி "உள்ளங்கவர் கள்வன்" என்னும் பொருள்பற்றி உபந்நியாசம் நிகழ்த்துவார்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

REGAL — JAFFNA
NOW SHOWING
Richard Chamberlain
IN
CHARGE IS
MURDER
(Panavision) (ADULTS ONLY)

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன்: 485
6-30 & 9-30
நாகேஸ்வரராவ்
சாவித்திரி
நடித்த
அனுராதா


## போட்டியின்றி ஒருவர் தெரிவு
### ஊர்காவற்றுறை பட்டினசபைத் தேர்தல்

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறை பட்டின சபையின் புதிய தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் நேற்று வடபகுதி தேர்தல்அதிகாரியால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒரு பெண் உட்பட எண்மர் போட்டியில் கலந்து கொள்கின்றனர். தற்போதைய மூன்றாவது வட்டார அங்கத்தவர் திரு. சிதம்பரப்பிள்ளை இம்முறை தேர்தலில் கலந்து கொள்ளாது விலகிக் கொண்டார்.

தற்போதைய அங்கத்தவர் திரு. எஸ். எம். அல்பிரட் இம்முறை போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். தமிழரசுக் கட்சியின் அனுமதி பெற்று நாலாம் வட்டாரத்தில் தற்போதைய அங்கத்தவரான திரு. பி. இம்மனுவேல் போட்டியிடுகிறார். இவருக்கு வீடு சின்னமாகக் கிடைத்துள்ளது.

**போட்டியின் விபரம் வருமாறு**

**1-ம் வட்டாரம்**

திரு. ஞா. ம. செல்வராசா (தராசு) (தற்போதைய அங்கத்தவர்), திரு. அலோசியஸ் பொஞ்சின் (பைசிக்கிள்.)

**2-ம் வட்டாரம்**

திருமதி மரியமாணிக்கம் (சூரியன்), திரு. பி. எஸ். ஐயாத்துரை (பைசிக்கிள்) தற்போதைய தலைவர்.

**3-ம் வட்டாரம்**

திரு. க. சிவலிங்கம் (கப்பல்), திரு. மு. பொன்னம்பலம் (தராசு)

**4-ம் வட்டாரம்**

திரு. பி. இம்மனுவேல் (வீடு) (த அ), திரு. வே. சிவசம்பு (சேவல்)

**5-ம் வட்டாரம்**

திரு. எஸ். எம். அல்பிரட் (த. அ.) போட்டியில்லை.

## திருக்கேதீச்சர திருப்பணிக் கூட்டம்

பருத்தித்துறை, வியாழன்

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி சம்பந்தமான பிரசாரக் கூட்டமொன்று வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

முதலியார் ஜி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் சைவமணி சேர் கந்தையா வைத்தியநாதன் உட்பட பல சைவப் பெரியார்கள் கலந்து கொள்வார்கள்.


## வரி விளம்பரம்

அனுபவம் வாய்ந்த சீன நிபுணரால் இயற்கை அமைப்புக்கேற்ப பற்களைக் கட்டுவதற்கு உகந்த இடம் யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே. கண் பார்வை பரிசோதனை செய்தும், டாக்டரினால் சிபார்சு செய்த கண்ணாடிகள் அழகிய பிரேம்களில் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம் எஸ். எம். பெர்னண்டோ, பிரதானவீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தி, யாழ்ப்பாணம். 895

### தேவை

சித்த ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு தராதரப்பத்திரமுள்ள வைத்தியர்கள், ஓர் ஓடலி, தோட்டி வேலை செய்யக்கூடிய குடும்பஸ்தர் (இந்தியர் விரும்பத் தக்கது) தேவை. நேரில் விண்ணப்பிக்கவும்.

காரம்பன் பிரத்தியேக ஆஸ்பத்திரி, ஊர்காவற்றுறை.1062

### விற்பனைக்கு

சுன்னாகம் கந்தரோடை றோட்டு அருகாமையில் சுன்னாகம் சந்தையிலிருந்து ஒரு மைல் தூரத்தில் 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு. நேரில் விசாரிக்கவும். செ. தம்பிராசா, இருபாலை கிழக்கு, கோப்பாய். 1065

### தேவை

நல்ல அனுபவமும் திறமையும் மிக்க கடைசல் தொழிலாளிகள் (Turners) தேவை. 2-11-64 திங்கட்கிழமை காலை 8-00—9-00 மணிக்கிடையில்நற் சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். ஹரன் என்ஜினியரிங் வேர்க்ஸ், 38, கோயில் வீதி, யாழ்ப்பாணம். 1066


## குட்டு வெளிப்பட்டது!

யாழ்ப்பாணம், வெள்ளி

மட்டுவில் கொலை முயற்சி வழக்கில் சாட்சியமளித்த இராமலிங்கம் சந்திரசேகரம், தனக்கு 80,000 ரூபா பெறுமதியான ஆதனமுண்டென்றும் 5000 ரூபா பெறுமதியான தனது கடையை எந்தவிதமான பத்திரங்களுமெழுதாமல் மகனுக்கு நன்கொடையளித்தாரென்றும் சாட்சியமளித்தபோது தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. இவ்வழக்கின் சாட்சியத்தை வருமானவரிக் கந்தோருக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.


- தீபாவளி -
விசேஷ இறக்குமதி

| | | |
|---|---|---|
| "பலஸ்" பட்டுச் சேலைகள் (சுத்த காஷ்மீர் பூக்கள்) | ரூபா | 18-25 |
| "ரூபி நைலெக்ஸ்" சேலைகள் (புத்தம் புதிய டிசைன்கள்) | " | 25-50 |
| பிறின்டெட் நூல் (RAW COTTON) சேலைகள் (இலங்கையில் முதல் தடவையாக கிடைப்பன) | " | 32-50 |
| கைத்தறி பட்டு நூல் சேலைகள் (Plain Striped and Checked with Blouse Piece) | " | 24-50 தொடக்கம் |
| "யூனியன்" மாலா மணிப்புரி சேலைகள் (கண் கவரும் வர்ணங்களில்) | " | 45-00 |

இன்னும் பல பல விதமான
"எலைட் "ஜோஜெற் சேலைகள், - "எலைட்"ஷிய சேலைகள் – "ரத்னா" வொயில் சேலைகள் – பிறின்றெட் லோன் சேலைகள் -

தாமதிக்க வேண்டாம் —
உடன் விரையுங்கள்

டயரும்ஸ்

மெயின் வீதி, யாழ்ப்பாணம்

வடபகுதி அசைஸ் விசாரணை

# மட்டுவில் கொலை முயற்சி வழக்கில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

மட்டுவில் கொலை முயற்சி வழக்கு மூன்றாவது தினமாக நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின், ஜூரிகளின் முடிவை ஏற்றுக்கொண்டு நீதியரசர் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

### குற்றச்சாட்டு

மட்டுவிலைச்சேர்ந்த முருகன் கணபதி, சதாசிவம் இராமலிங்கம், கனகன் பூதன் ஆகியோர்மீது அதே ஊரைச் சேர்ந்த சபாபதி மகாலிங்கத்தைக்கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

### வழக்கறிஞர்கள்

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ரி. கணேசலிங்கம், திரு. எஸ். கே. திரவியநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

### குறுக்கு விசாரணை

ஆசிரியர் மகாலிங்கத்தை எதிரிகளின் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: உமது இரு வீடுகளில் ஒன்றை ஆசிரியைக்கு வாடகைக்கு கொடுத்தீரா? - ஆம்.

நீதி: ஆசிரியைக்கு எத்தனை வயது? - 35 வயது.

வழ: உமது வீட்டிற்கும், வாடகைக்கு கொடுத்திருக்கும் வீட்டிற்கும் எவ்வளவு தூரம்?- ஒரு வீடு றோட்டிற்கு இந்தப் பக்கம், மற்றது அந்தப்பக்கம்.

வழ: அந்த வீட்டிற்கு ஒவ்வொரு நாளும் போவீர்? - ஆம்.

வழ: உமது மனைவி போவதில்லை? - இல்லை.

வழ: உமது பிள்ளைகள் போவார்களா? - சில சமயம் போவார்கள்.

வழ: மூத்த பிள்ளைக்கு எத்தனை வயது?-16 வயது.

நீதி: மகனா?-மகள்

வழ: மகனும் போவார்?— அடிக்கடி போவதில்லை. அங்கே எனது மாடுகள் இருக்கின்றன.

நீதி: நீர் குடும்பத்துடன் இருப்பது கைதடியில்?-ஆம்.

நீதி: உமது மாடுகளை கைதடியில் வைத்திருக்கலாமே?-அங்கே புல் இல்லை.

நீதி: கைதடியில் உள்ளவர்கள் மாடு வளர்ப்பதில்லையா?-வளர்ப்பார்கள்.

நீதி: நீரும கைதடியில் வளர்க்கலாமே?-எனக்கு இது வசதி கூட.

வழ: மட்டுவில் வீட்டில் இரவிலும் தங்குவீர்?-ஆம்

வழ: என்ன காரணம்?— நேரம் சென்றால் தங்குவேன்.

வழ: அந்தவீட்டிலிருந்து 1-ம் எதிரியின் வீடு எவ்வளவு தூரம்?-100 யார்.

வழ: கீழ் கோர்ட்டில், மட்டுவில் வீட்டில் எதிரிகள் அவதானித்ததாகக் கூறினீர்?-ஆம்.

வழ: சம்பவம் நடப்பதற்கு 15 நாட்களுக்கு முன் உமக்கு ஏதாவது நடக்கப்போவதென சந்தேகப்பட்டீரா?-ஆம்.

சந்திரசேகரம் சாட்சியமளிக்கும்போது கூறியதாவது:

சம்பவம் நடந்த இடத்திற்கு நான் போனபோது மகாலிங்கம் சயிக்கிளுடன் விழுந்துகிடந்தார். காயங்களிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அவர் மயக்கமாயிருந்ததால் கதைக்கவில்லை. பின் கார் கொண்டுவந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனேன்.

எதிரிகளின் வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் குறுக்கு விசாரணைசெய்தார்.

## எதிரிகள் சட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடி. வழ: இக்கொலை வழக்கிற்காக ரிமாண்டில் இல்லை சட்டவிரோதமாக வந்த வழக்கில் ரிமாண்டில் இருக்கிறார்கள்.

நீதி: (எதிரிகளிடம்) இந்தியாவிற்குப் போனீர்களா?- இல்லை.

நீதி: அங்கிருந்து மீண்டும் வந்தீர்களா?-இல்லை.

நீதி: இந்த வழக்கில் இவர்கள் இருவரையும் பிணையில் விடமுடியாது. இக்கொலை வழக்கில் இவர்களை ரிமாண்டில் வைக்க உத்தரவிடுகிறேன்.

இவ்வழக்கில் எதிரிகள் சார்பில் திரு. எஸ். அமிர்தலிங்கத்தை நியமிப்பதாக நீதியரசர் தெரிவித்தார்.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பித்த உத்தரவுக் கிணங்கவே இவ்வித அக்கிரமங்கள் நடைபெற்றிருக்கலாம். அந்த உத்தரவு கூறுவதாவது:-

சுறுசுறுப்பான அதிகாரிகள் மூலம் எல்லா விக்கிரகங்களையும் நீங்கள் கண்டு பிடித்து அவற்றை சுக்கு நூறாக்கி நாசப்படுத்துமாறு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம். எந்த இடத்தில் அவை இருப்பினும் சரி, உலோகத்திலோ, வெண்கலத்திலோ, மரத்திலோ, களிமண்ணிலோ அல்லது வேறு எந்தப் பொருளிலோ யாராவது அவ்வித உருவங்களைச் செய்யத் துணிந்தாலும், பகிரங்கமாகவோ, அல்லது தனிப்பட்ட முறையிலோவிழாக்கள் நடத்தினாலோ, அல்லது அதற்கு உதவினாலோ அவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்படுமென்று பிரகடனப்படுத்த வேண்டும்".

போர்த்துக்கேய மன்னரின் இந்த உத்தரவு இலங்கைக்கும் செல்லுபடியாயிற்று என்று, அவர் வத்திக்கானை பக்தியுடன் பின்பற்றுபவரென்றும் கமிஷன் கூறி, இந்நாட்டில் போர்த்துக்கேய ஆட்சியில் பௌத்தர்கள் கொடுமைப் படுத்தப்பட்டதாயும், களுத்துறை, தோடகமுவை, கீராதனை, வத்தனை இவ்விடங்களிலே விகாரைகள் இருந்த இடத்தில் றோமன் கத்தோலிக்க கோவில்கள் கட்டப்பட்டப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

எப்போதோ செய்யப்பட்ட இக்காரியங்களுக்கு, இப்போதுள்ளவர்கள் பொறுப்பல்ல. என்றாலும் மனக்கசப்புகள் அதிகமிருப்பது பகிரங்க ரகசியம். இதை எப்படி நீக்குவது? வத்திக்கானில் கூடிய கத்தோலிக்க பெரிய குருமார் சபையினர் இது பற்றியும் யோசித்து, தக்க தீர்மானம் செய்ய வேண்டும். அடுத்த மார்கழியில் போப்பாண்டகை பம்பாய்க்கு விஜயம் செய்யுமுன், இதற்கான நடவடிக்கை எடுப்பின், பழைய மனக்கசப்புகள் நீங்கவும், சமய நல்லுறவுகள் வளரவும் பெரிதும் வழி பிறக்கும். இங்குள்ள கத்தோலிக்க சமூகத் தலைவர்கள் இதற்கான முயற்சிகளை எடுப்பது பலவிதங்களிலும் நன்மையாகும்.

நீலமாமணி கண்டதர்
நீள் சடைக்
கோலமாமதி கங்கையுங்
கூட்டினர்
சூலமான் மழு ஏந்திச்
சுடர் முடிப்
பால் நெய்யாடுவர்
பாலைத்துறையரே
—திருநாவுக்கரசர்

## மீண்டும் 'ஸ்ரீ' போராட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தற்போது யாழ்ப்பாணத்துக்கும் அனுராதபுரத்துக்குமிடையில் சேவையிலீடுபட்டிருக்கும் சிங்கள 'ஸ்ரீ' இலக்கம் பொறிக்கப்பட்ட பஸ்ஸை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியதை ஆட்சேபித்து மீண்டும் ஒரு 'ஸ்ரீ' போராட்டத்தை நடத்தலாமா என்பதை ஆராய்வதற்காக வரும் ஞாயிற்றுக்கிழமை தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி கூடுகிறது.

## எம். பி.யின் ஆட்சேபம்

கொழும்பு, வியா.

இந்தியாவுக்குச் செல்லும் விமானத்தை பலாலியில் நிறுத்துவதில்லை என்ற விமான சேவையின் முடிவையிட்டு யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிறட் துரையப்பா, போக்குவரத்துமந்திரிக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளார். இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னை செல்வோர் கொழும்பு சென்று விமானம் ஏறும்படியான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய முயற்சிக்கும் விமான சேவையாளர் இவ்விதம்செய்வது புத்திசாலித்தனமற்றதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதைக் கவனித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதாக மந்திரி வாக்குறுதியளித்துள்ளதாகத் தெரிகிறது.

## சிங்கள ஆசிரியர் நியமனத்துக்கு ஆட்சேபம்

மன்னார், வியாழன்

மன்னாரிலுள்ள மெச்சிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு சிங்கள ஆசிரியர் ஒருவர் அனுப்பப்பட்டதையிட்டு மன்னார்—கள்ளிக்கட்டைக்காடு பெற்றார்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்கள்.

அரசாங்கம் இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்காவிட்டால் அச் சிங்கள ஆசிரியரைத் திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளைத் தாமே மேற்கொள்ளுவதென்று மன்னார்—கள்ளிக்கட்டைக்காடு பெற்றோர் சங்கம் அரசாங்கத்துக்கு திட்டவட்டமாக அறிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

## இன்று

சண்டிருப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாள் கோவிலில் 6 மணிக்கு திரு. வினசித்தம்பி 'உள்ளம் கவர் கள்வன்' என்னும் பொருள்பற்றி பிரசங்கம் நிகழ்த்துவார்.

⁂ ⁂ ⁂

யாழ்ப்பாண மத்தியகல்லூரியில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் தின பொதுக்கூட்ட இறுதியில் அமெரிக்க தகவல் பகுதியினரின் திரைப்படக் காட்சியொன்றும் நடைபெறும்.

## சுமுகமான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லேயே சிறு சிறு பேதங்கள் ஏற்பட்ட பொழுதிலும் இவ்வித சமரச உடன்பாட்டுக்கு வரமுடிந்ததென உயர் அதிகாரிகள் கருத்து தெரிவித்தனர். இன்று இரவு எட்டு மணியளவில் உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து அதிகாரிகள் அறிக்கை தயாரிப்பதில் முனைந்தனர்.

### ராஜரத்தினாவின் ஆட்சேபம்

பதினறு லட்சம் பேரையும் இந்தியா ஏற்றுக்கொள்ளும் வரை ஒப்பந்தம் எதிலும் கைச்சாத்திடவேண்டாமென திரு. கே. எம். பி. ராஜரத்தினா பிரதமர் சிறிமாவை தந்தி மூலம் கேட்டிருந்தார்.

# காலிமுக மைதானத்தில் எதிர்க்கட்சிகளின் கூட்டம்

கொழும்பு, வியா.

ஏரிக்கரைப் பத்திரிகைகளை அரசாங்கம் எடுப்பதை ஆட்சேபிக்கும் முகமாக எதிர்கட்சிகள் ஒன்று சேர்ந்து நவம்பர் மாதம் 11-ந் திகதி காலிமுகத்திடலில் ஓர் மாபெரும் கூட்டத்தை நடத்துவதென இன்று காலை முடிவு செய்துள்ளனர்

இக்கூட்டத்திற்கு முன்னதாக கொழும்பு நகரத்தினூடாக ஒருபிரமாண்டமான ஊர்வலத்தையும் நடத்துவர். ஐக்கிய தேசியக்கட்சி, தமிழரசுக் கட்சி, எம். ஈ. பி., ஜா. வி. பெ., எல். பி. பி., ஜேபேட் குணவர்த்தனாவின் இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் ஒன்று சேர்ந்து கைச்சாத்திட்ட கடிதமொன்றை காலிமுகத்திடலில் கூட்டம் நடத்துவதற்கு உத்தரவு கோரி இன்று உள்நாட்டு மந்திரிக்கு அனுப்பியுள்ளனர். இந்தக் கூட்டத்தில் பங்குபற்றும்படி சகல தொழிற்சங்கங்களுக்கும் அழைப்பு விடுக்கபபட்டுள்ளது. கூட்டத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா தலைமை வகிப்பார்.

இக் கூட்டம் நடாத்துவதற்கான ஒழுங்குகள் பற்றி ஆராய இன்று காலை பாராளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிட்ட கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் பங்குபற்றினர்.

# குடிபோதையில் கிடந்தவர் ரயிலுக்கு பலி

## 7 பிள்ளைகளின் தந்தையின் கதி

மாவிட்டபுரம், வியாழன்

7 பிள்ளைகளின் தந்தை ஒருவர் குடிபோதையில் புகைபிரதப்பாதையில் விழுந்து கிடந்தபோது அவ்வழியே வந்த ரயில் அவர் மீது மோதியதால் அவர் மரணமானார்.

இப் பரிதாப சம்பவம் இணுவிலில் நடைபெற்றுள்ளது.

இதுசம்பந்தமாகக் கூறப்படுவதாவது:

இன்று அதிகாலை 1 மணியளவில் சுன்னாகம் வந்த சரக்கு ரயில்வண்டியின் தலைமைகார்ட் சுன்னாகம் ஸ்டேஷன் மாஸ்டரிடம் புகையிரத கைகாட்டிக்கு சுமார் 100 யார் தூரத்தில் ஒருவர் பிணமாகக் கிடப்பதாக தகவல் தெரிவித்ததைத் தொடர்ந்து இதுவிஷயம் உடனடியாக சுன்னாகம் பொலிசாருக்குத் அறிவிக்கப்பட்டது. சுன்னாகம் பொலிஸார் உடனே ஸ்தலத்துக்கு விரைந்து சென்று விசாரணை செய்ததில் இணுவிலைச் சேர்ந்த பெரியான் வேலன் (55) என்பவரே ரயிலினால் மோதுண்டு உடம்பு சிதறியநிலையில் கிடக்க காணப்பட்டார் என அறியப்பட்டது.

பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்ததில் காலம் சென்றவர் நேற்றிரவு அதிக குடிபோதையில் இருந்ததாகவும் இதற்கு முன்னரும் பல தடவைகளில் அவர் இவ்விதம் குடிவெறியில் ரயில் பாதையில் கிடந்ததாகவும் அவரது உறவினர்கள் அப்போதெல்லாம் அவரை அங்கிருந்து அகற்றி விடுவதாகவும் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் ஒருவரும் அவரைக் காணவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. சி. தருமலிங்கம் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

# "அரசாங்க ஊழியருக்கு சிங்களத்தேர்ச்சி அவசியம்"

## நீதிமந்திரி விளக்கம்

கொழும்பு, வியாழன்

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் அலுவலகள் நடைபெறுவதால் அரசாங்க பொது சேவைநிர்வாகம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறதென நீதிமந்திரி திரு. ஜி. சி. ரி. ஏ. டி' சில்வா அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார். இதன் காரணமாக அரசாங்கசேவையில் கடமையாற்றும் சகல ஊழியர்களும் சிங்களத்தில் தேர்ச்சிபெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென நீதிமந்திரி தமது மந்திரிசகாக்களிடம் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள முறைப்படி மொழிபெயர்ப்புச் செய்யப்படுவதால் திறமைக் குறைவும் அதிக செலவும் ஏற்படுகிறது. என மந்திரி சுட்டிக்காட்டியுள்ளார்.

1956-ம் வருடத்துக்கு முன்னர் அரசாங்கசேவையில் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் விலக்கு காரணமாக சிங்களத்தில் தேர்ச்சிபெற்றுள்ளவர்களும் ஆங்கிலத்தில் தொடர்ந்து வேலைசெய்துவருகிறார்கள். இதனால் அரசகரும மொழிச்சட்ட அமுல் பாதிக்கப்படுகிறது என்றும் மந்திரி தெரிவித்துள்ளார்.

எந்த இலாகா ஆங்கிலத்தில் கருமம் ஆற்றவேண்டுமென்பதுபற்றி அரசகரும மொழி இலாகா கமிஷனர் குறிப்பிட்ட இலாகாவைச் சேர்ந்த நிரந்தரக் காரியதரிசியுடன் ஆலோசனைசெய்து பின்னர் தீர்மானிக்கப்படும்.

## யு. எஸ். விமானம் சுடப்பட்டது

நாங்பென், அக். 29

கம்போடியா எல்லைக்கு உட்புறம் பறந்த ஒரு அமெரிக்க போக்குவரத்து விமானம் சுடப்பட்டதால் 8 பேர் மாண்டனர் என அறிவிக்கப்பட்டது.

## சீனு செல்லும் பிரிட்டிஷ் மந்திரி

லண்டன், அக். 29

பிரிட்டிஷ் வர்த்தக போர்ட் தலைவர் திரு. ஜே. சீனுவின் பிரிட்டிஷ் வர்த்தக பொருட்காட்சியைத் திறந்துவைக்கும் பொருட்டு பீகிங் புறப்பட்டார். வழியில் அவர் மாஸ்கோவில் தங்கி சோவியத் பிரதமர் திரு. கோஸிஜினைச் சந்திப்பார்.


### ஏலவிற்பனவு ஒத்திவைப்பு

பத்தைமேனியில் 31-10-64ல் விற்பனவுக்கு போடப்பட்ட காணிகள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. செ. விசாகரத்தினம், வெந்தீஸ்மேஸ்தர். 1069

### விற்பனைக்கு

பண்ணை றோட்டுக்கருகாமையில், 'அல்லைப்பிட்டியிறை' கொக்கிளர்ச்சியில் 40 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு.

ஞாயிற்றுக் கிழமைகளில் C. B. அன்ரன், நாரந்தனை என்ற விலாசத்தில் தொடர்பு கொள்க. 1068


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.